1982 மார்ச் 11]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே பள்ளிகள், கல்லூரிகள் மற்றுமுள்ள கல்வி நிறுவனங்களுக்கு எல்லாம் வழங்க இடமிருக்கிறது. சட்டக் கல்லூரிக்குக் கொடுத்திருக்கிறோம் ; மருத்துவக் கல்லூரிக்குக் கொடுத்திருக்கிறோம் ; எல்லா இடங்களிலும் படிப்பு நிறுவனங்கள் எல்லாவற்றுக்கும் கொடுக்கும் வாய்ப்பு இருக்கிறது.

வஞ்சிபாளையத்தில் ரயில்பெட்டி தொழிற்சாலை

*வினா எண் 473— திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம், அவினாசி தாலுகா, அவினாசிக்கு அருகாமையிலுள்ள வஞ்சிபாளையம் என்ற கிராமத்தில் ரயில் பெட்டி தொழிற்சாலை ஆரம்பிக்க திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(இ) மத்திய அரசிடம் வற்புறுத்தி இதை பெற நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் உள்ள போக்குவரத்து நெரிசல்.

வினா எண் 474— திரு. எம். சின்னசாமி, திரு. இரா தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை-சென்ட்ரல் நிலையத்தில் போக்குவரத்து நெரிசல் மிகுந்து இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் மாற்று ஏற்பாடு செய்வதற்கு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) ஆம்.

(ஆ) மற்றும் (இ) தென்னக ரயில்வே மூர் மார்க்கெட், உள்ள இடத்தை எடுத்துக் கொண்டு சென்னை சென்டிரல் ரயில் நிலையத்தை விரிவு படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளது. மேற்கண்ட விரிவாக்கப் பணியில் வளர்ந்து வரும் மக்கள் தொகை காரணமாக ஏற்படும் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க, ஆட்டோ, டாக்சி மற்றும் பிற வாகனங்கள் ரயிலடிக்குச் சுலபமாக வந்து போக வழி வகை செய்யும் திட்டம் ஒன்றை நிறைவேற்றி வருகிறது.

(முற்பகல் 9-50)

திரு எம் சின்னசாமி: துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இப்போது விரிவாக்கப் பணியிலே ஈடுபட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எவ்வளவு காலத்திற்குள் அந்தப் பணி முடிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? ஆனால் தற்போது அதிகமான நெருக்கடி ஏற்பட்டிருப்பதால் தற்காலிகமாக ஆட்டோ, ரிக்ஷா, டாக்சிகள் போன்றவற்றை அருகிலே இருக்கின்ற வால்டாக்ஸ் ரோட்டிலே நிறுத்துவதற்குரிய ஆலோசனையை அரசு செய்யுமா?

மாண்மிகு திரு. சு. முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினை அவர்கள் பெரிய திட்டமாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இரயில்வே நிலையத்தினை விரிவு படுத்துவதோடு வருகின்றவர்களுக்கும், போகின்றவர்களுக்கும் வசதியாக வாகனங்களை நிறுத்துவதற்கான வழியிலேயும் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதனை எப்போது முடிப்பார்கள் என்ற குறிப்பு என்னிடத்திலே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் தற்காலிகமாக அங்கே நெரிசலைக் குறைப்பதற்காக டாக்சிகளையும், ஆட்டோ ரிக்ஷாக்களையும் வேறிடத்திலே நிறுத்தினால் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படும். ஆகவே காவல் துறையினரிடம் சொல்லி வருகின்ற நெரிசலைக் கட்டுப்படுத்தி கொஞ்சம் ஒழுங்காக வைத்திருந்தாலே அது சுலபமாக இருக்கும் என்ற வகையிலே அந்த ஏற்பாட்டை செய்து அதனை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தற்போது சென்ட்ரல் ஸ்டேஷன் உள்ள பகுதியை ஒட்டி ஜெனரல் ஆஸ்பத்திரி, மூர் மார்க்கெட் மற்றும் பூந்தமல்லி ஐரோடு முதலியவை இருப்பதால் ஜன நெருக்கடி மிகவும் அதிகமாக இருக்கிறது. இந்த நெரிசலைச் சமாளிக்க, சென்ட்ரல் ஸ்டேஷனையே அங்கிருந்து நீக்கி, பாடிகாட் ரோட்டின் அருகே பல்லவன் பணிமனை எதிரேயுள்ள காலி இடத்துக்கு மாற்றும் யோசனை பற்றி சிபாரிசு செய்து மத்திய அரசுக்கு அனுப்பப்படுமா?

1982 மார்ச் 11

மாண்புமிகு திரு.சு. முத்துசாமி : துணைத் தலைவர் அவர்களே, ஏதாவது நடக்கக்கூடிய சிபாரிசு என்றால் அதை நான் செய்வதற்கு ஆசைப்படுகிறேன். எனவே இந்த சிபாரிசினைச் செய்ய அரசாங்கம் தயாராக இல்லை என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாய் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கான கடனுதவி.

வினா எண் 399— திரு. ஏ. சாகுல் ஹமீது : மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தொழில் வணிகத் துறையில் இருந்த பாய் நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களை, காதி வாரியத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அச்சங்கங்களுக்கு காதி வாரியம் கடனுதவி அளிக்க மறுப்பது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : : (அ) ஆம்.

(ஆ) பாய் நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கடனுதவி வழங்கி வருகிறது. ஆகவே, இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பாய் தொழில் செய்யக் கூடியவர்கள் பொருளாதார ரீதியாக மிகவும் நலிந்தவர்கள். குறிப்பாக பத்தமடை மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களின் தொகுதி. அங்கே உள்ள பெரும்பகுதியான மக்கள் இந்தப் பாய் செய்யும் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் பொருளாதார ரீதியாக மிகவும் அவதிப்படக்கூடிய சூழ்நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்குப் போதுமான அளவுக்குக் கடன் உதவி செய்து தரவேண்டும். பத்தமடை பாய் என்பது உலகப் பிரசித்தி பெற்றது. அதேபோல் வீரவநல்லூர் பகுதியிலேயும் இந்தத் தொழிலிலே மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் பொருளாதார ரீதியாக உயர்த்துவதற்குரிய திட்டம் ஏதாவது உள்ளதா ? அப்படியானால் அதுபற்றி அரசாங்கத்தின் நிலைமை என்ன என்பதைத் தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : துணைத் தலைவரவர்களே, பத்தமடை பாய் முடைவோர் கூட்டுறவுச் சங்கம், வீரவநல்லூர் பாய் முடைவோர் கூட்டுறவுச் சங்கம்